இனிமையான குழந்தைகளே! நீங்கள் எப்போது பாபாவின் மடியில் வருகின்றீர்களோ அப்போது இந்த பழைய உலகம் அழிந்து விடுகின்றது. உங்களுடைய அடுத்தப் பிறவி புதிய உலகத்தில் எடுப்பீர்கள். ஆதலால் பழமொழி கூறப்பட்டுள்ளது, நீங்கள் இறந்தால் உலகமே இறந்து விட்டது.

கேள்வி: எந்தவொரு பழக்கத்தின் ஆதாரத்தில் பாபாவின் அவதாரத்தை நிரூபிக்க முடியும்?

பதில்: பாரதத்தில் ஒவ்வொரு ஆண்டும் இறந்தவர்களுக்கு திவசம் (திதி) செய்யும் பழக்கம் உள்ளது. ஏதாவது பிராமணர்களின் உடலில் இறந்தவர்களின் ஆத்மாவை அழைப்பார்கள். பின்னர் பேசுவார்கள், அவர்களின் ஆசைகளைக் கேட்பார்கள். உடல் என்பது வருவதில்லை, ஆத்மா தான் வருகின்றது. இது டிராமாவில் பதிவாகியுள்ளது. எவ்வாறு ஆத்மா பிரவேசம் ஆக முடியுமோ அதே போல் தான் பரமாத்மா அவதாரம் செய்ய முடியும். இதனை குழந்தைகளாகிய நீங்கள் நிரூபித்து புரிய வைக்க வேண்டும்.

பாடல்: இறந்தாலும் உன்னுடைய மடியில்..............

ஓம்சாந்தி! இந்த சமயத்தின் மகிமை, பின்னர் பக்திமார்க்கத்தில் நடைபெறுகின்றது. இச்சமயம் நீங்கள் பாபாவிடம் வாழ்ந்து கொண்டே இறக்கின்றீர்கள் அதனால். உலகம் முழுவதும் அழிந்து விடுகின்றது. அஞ்ஞான காலத்தில் மனிதர்கள் இறந்தால், இந்த உலகத்திலேயே பிறவி எடுப்பார்கள். உலகம் நிலையாக இயங்குகின்றது. நீங்கள் இறந்தால், உலகமே இறந்து விட்டது என்று பழமொழி உள்ளது. ஆனால் அவர்கள் இறப்பதால் உலகம் அழிவதில்லை. இதே உலகத்தில் மீண்டும் பிறப்பு எடுப்பார்கள். நீங்கள் இறந்த பின்னர் உலகமே அழிந்துவிடும் உங்களுக்குத் தெரியும். பின்னர் நாம் புதிய உலகத்தில் வருவோம் என்று. இதனை பிராமணர்களாகி நீங்கள் தான் அறிந்துள்ளீர்கள். ஈஸ்வரனுடைய குழந்தையாக ஆவதால் நமக்கு சத்யுகம் பிறப்பு உரிமையாக கிடைக்கின்றது. சொர்க்கம் என்ற இராஜ்யமே கிடைக் கின்றது. நரகம் என்பது அழிந்து விடுகின்றது. இதில் எந்தவிதமான முயற்சியும் இல்லை. பாபாவை மட்டும் நினைவு செய்ய வேண்டும். மனிதர்கள் யாராவது இறக்கும் சமயத்தில், இராம், இராம் என்று கூறுங்கள் என்று சொல்வார்கள், பின்னர் இறந்த உடலை தூக்கும் போதும் இராம் நாமம் சத்தியம் என்று கூறுவார்கள். இது பகவானை கூறுகின்றார்கள். இராம் நாமம் சத்தியம் என்றால் பரமபிதா பரமாத்மா சத்தியமானவர், அவரின் நாமத்தினைக் கூற வேண்டும். இராம், இராம் என்று கூறிக்கொண்டே மாலையை உருட்டு வார்கள். இராம் நாமத்தினை ஜெபிப்பதை ஒரு வாத்திய கருவியை இசைப்பது போல் ஒலிப்பார்கள். குழந்தைகளுக்கு பாபா புரிய வைக்கின்றார், நீங்கள் எந்த சப்தமும் செய்ய வேண்டியதில்லை. புத்தியின் மூலம் நினைவு செய்ய வேண்டும். நீங்கள் அறிந்து கொண்டீர்கள் வாழ்ந்து கொண்டே ஈஸ்வரனுடைய மடியில் வருவதால், இந்த துக்கமான உலகம் அழிந்துவிடுகின்றது. பாபா, உங்களின் கழுத்து மாலையாக ஆகிவிடுவோம். ருத்திரமாலை என்று புகழ் பாடியுள்ளார்கள். இராம் மாலை என்று சொல்லப்படுவதில்லை. நீங்கள் ருத்திர மாலையில் மணியாக ஆவதற்கு, இந்த ருத்திர ஞான யக்ஞத்தில் அமர்ந்துள்ளீர்கள். கல்பத் திற்கு முன்புபோல் இருக்கின்றீர்கள். மற்ற எந்த

சத்சங்கத்திலும் கூறமாட்டார்கள், நாங்கள் பாபாவின் கழுத்து மாலையில் மணியாக ஆகி உள்ளோம். அவசியம் பாபாவிடமிருந்து ஆஸ்தி கிடைக்கின்றது. பாபா என்று கூறுவது யார்? ஆத்மா. ஆத்மாவில் புத்தி உள்ளது. முதலில் புத்தி புரிந்து கொள்கின்றது, பின்னர் கூறுகின்றது. முதலில் எண்ணத்தில் வருகின்றது, பின்னர் கர்மேந்திரியம் மூலம் கூறுகின்றது. நாங்கள் பாபாவுடையவர்களாக ஆகிவிட்டோம். பாபாவுடையவர்களாகவே இருப்போம். இந்த கடைசிப் பிறவியில் இறைவனை தந்தை என்று கூறுகின்றோம். பின்னர் கேளுங்கள் உங்களிடம் இறைவன் தந்தையைப் பற்றிய ஞானம் இருக்கின்றதா? கடவுள் சர்வவியாபி என்று கூறுவார் கள். உங்களின் ஆத்மா கூறுகின்றது பரமபிதா, தந்தை என்றால், எப்படி சர்வவியாபி ஆக முடியும்? குழந்தைக்குள் தந்தை வந்துவிட்டாரா என்ன? தந்தையை சர்வ வியாபி என்று கூறுவது முற்றிலும் தவறு. இந்த விஷயத்தை நன்றாகப் புரிந்து கொண்டு பின்னர் புரிய வைக்க வேண்டும்.

ருத்திர ஞான யக்ஞும் மிகவும் புகழ் பெற்றது. கிருஷ்ணர் சாகாரத்தில் உள்ளார். பகவான் என்று யாரைச் சொல்லலாம்? கிருஷ்ணரை சொல்ல முடியாது. மனிதர்கள் மிகவும் கபடமற்று இருக்கின்றார்கள். இறைவன் சர்வ வியாபி என்று கூறப்படுகின்றது. அப்பா தனது வீட்டில் தான் இருப்பார், வேறு எங்கே இருப்பார்? இப்போது பாபா எல்லையற்ற வீட்டிலிருந்து இங்கே வந்துள்ளார். இவருள் பிரவேசம் ஆகியுள்ளேன் என்று கூறுகின்றார். எவ்வாறு பிராமணர்களை திவசத்தின் நாளன்று அழைக்கின்றார்கள். சிலர் தன்னுடைய தந்தை திவசத் தின் போது உணவு செய்து படைப்பார் கள். இறந்து போன தந்தையின் ஆத்மா பிராமணரின் உடலில் வந்துள்ளது. இவருடைய உடலில் பிரவேசம் ஆகியுள்ளது, ஏதாவது கேட்க வேண்டும் என்றால் கேளுங்கள். முன்பு திவசத்தின் நாளன்று இறந்து போனவர்களின் ஆத்மாவை அழைக்கும் பழக்கம் இருந்தது. ஆத்மாவை அழைத்து, ஆத்மாவிற்கு உணவு செய்து ஊட்டுவார்கள். இன்று தாத்தா வின் திவசம், இன்னாருடைய திவசம் என்று கூறுவார்கள். ஆத்மாவை அழைத்து, ஆத்மாவிற்கு உணவு செய்து ஊட்டுவார்கள். யாருக்காவது மனைவியின் மீது அன்பு இருந்தால், உடலை விட்டுப் போய் விட்டால், அந்த ஆத்மாவை அழைப்பார்கள். நான் வைர மோதிரம் போடுகி ன்றேன் என்று உறுதிமொழி கொடுத்திருந்தேன். பிராமணர்களை அழைத்து வைர மோதிரம் போடுவார்கள். ஆத்மாவைதான் அழைப்பார்கள், உடல் வருமா என்ன? இந்தப் பழக்கம் பாரதத்தில் தான் உள்ளது. நீங்கள் எவ்வாறு சூட்சுமவதனத்திற்கு செல்கின்றீர்கள். யாராவது இறந்து விட்டால், பிரசாதம் செய்து படைக்கின்றோம். அப்போது சூட்சும வதனத்தில் அந்த ஆத்மா வரு கின்றது. இது முற்றிலும் புதுமையான விசயங்கள் எதுவரை மனிதர்கள் நன்றாக புரிந்து கொள்ளவில்லையோ, அதுவரை மனிதர்களுக்கு சந்தேகம் வருகின்றது, இவர்கள் என்ன செய்கின்றார்கள்? பிராமணர்களின் பழக்க வழக்கம் தனிப்பட்டது. அனைத்து கோவில் களிலும் பிரசாதம் படைப்பார்கள். இறந்தவர்களுக்கும் பிரசாதம் செய்து படைப்பார்கள். குருநானக் ஆத்மாவிற்கு பிரசாதம் செய்து வைக்கின்றார்கள். இப்போது அவர் எங்கே உள்ளார்? அதனை புரிந்து கொள்ள முடியாது. உங்களுக்குத் தெரியும் யாரெல்லாம் தர்ம ஸ்தாபனை செய்தார் களோ, அவர்கள் எல்லாம் இங்கு தான் உள்ளார்கள். எவ்வாறு பாபா கூறுகின்றார், பிராமண தர்மத்தை ஸ்தாபனை செய்கின்றேன் இவர் பதீத்பாவனர். பாவனமான ஆத்மா வந்து தர்ம ஸ்தாபனை ஆகின்றது.

ஆனால் சதோபிரதான் ஆத்மா, சதோ, இரஜோ மற்றும் தமோவில் வருகின்றது. இச்சமயம் ஆத்மாக்கள் அனைத்தும் சவப் பெட்டியில் உள்ளது. பாபா பதீத் பாவனன். அவர் சவப்பெட்டியில் வருவதில்லை. மனிதர் களை பதீத் பாவனன் என்று கூறமுடியாது. பதீத பாவனன் என்றால் முழு உலகிற்கும் பதீத் பாவனன். ஒரு பாபாவைத் தவிர முழு உலகத்தையும் பதீத்தத்திலிருந்து பாவனமாக ஆக்க முடியாது. அவர்கள் தன்னுடைய தர்மத்தினை ஸ்தாபனை செய்ய வருகின்றார்கள். அங்கு கிறிஸ்து தர்மத்தின் முழு வம்சமும் இருக்கும். முதலில் கிறிஸ்து வருகின்றார், பின்னர் அனைவரும் வருகின்றார் கள், வளர்ச்சி அடைகின்றது. அவர்கள் யாரையும் பதீத்பாவனனாக ஆக்குவதில்லை. அவர்களின் எண்ணிக்கை வரிசைப்படியாக வருகின்றார்கள். இச்சமயம் பதீத்பாவனன் தேவையாக உள்ளார். அனைவரும் பிணமாக உள்ளார்கள். அனைவரையும் பாவனமாக ஆக்கக் கூடியவர் பாபா.

இச்சமயம் முழு உலகமும் இற்றுப் போய் விட்டது. ஆலமரம் உதாரணம். ஆலமரம் மிகவும் பெரியது. அதனின் அஸ்திவாரம் இற்றுப் போய்விட்டது, கிளைகள் உள்ளது. தேவி, தேவதா தர்மத்தின் அஸ்திவாரம் துண்டிக்கப்பட்டு விட்டது. மற்றவை யாவுமே உள்ளன. விதையின் மூலமாக மீண்டும் ஸ்தாபனை ஆகின்றது. பாபா கூறுகின்றார் மீண்டும் வந்து நான் ஸ்தாபனை செய்கின்றேன். பிரம்மாவின் மூலமாக ஸ்தாபனை, சங்கர் மூலமாக அழிவு, அநேக தர்மம் அழிவாகின்றது. மகாபாரத யுத்தத்தின் சமயம் யார் இராஜயோகத் தினைக் கற்றுக் கொண்டார் களோ, அவர்களுடைய இராஜ்யம் ஸ்தாபனை ஆகிவிடுகின்றது. உங்களுக்குத் தெரியும் நாம் பாபாவிடம் செல்கின்றோம் பின்னர் புதிய உலகத்தில் வருவோம். பின்னர் மரம் வளர்ச்சி அடைகின்றது. தேவி, தேவதா தர்மம் இருந்தது. மறைந்து விட்டது. நான் வந்து ஆதிசநாதன தேவி, தேவதா தர்மத்தினை ஸ்தாபனை செய்கின்றேன் என்று பாபா கூறுகின்றார். உயர்ந்த திலும், உயர்ந்த பாரதத்திற்கு கிரகணம் பிடிக்கின்றது. உங்களின் ஆத்மா காமம் என்ற விகாரத் தால் கறுப்பாக ஆகிவிட்டது. இப்போது நீங்கள் ஞானம் என்ற சிதையில் அமர்ந்து வெள்ளை யாக ஆகிவிட்டீர்கள். நீங்கள் ஷ்யாமாக (கருப்பு) ஆகி விட்டீர்கள். ஷ்யாமாக உள்ளவரை சுந்தரமாக ஆக்கக் கூடியவர் பரமபிதா பரமாத்மா. அவருடைய ஸ்ரீமத் கிடைக்கின்றது. பரமபிதா பரமாத்மாவின் ஆத்மா என்றும் தூய்மையாக உள்ளது. ஆத்மாவில் தான் கலப்படம் ஆகின்றது (தங்கம் மாதிரி) இப்போது நீங்கள் தெரிந்து கொண்டீர்கள், இந்த பழைய உலகத்திற்கு அழிவு ஏற்படும். அனைவருக்கும் மரணம் ஏற்படும். இராம், இராம் என்று கூறுங்கள் என்று சொல்லக் கூடியவர் யாருமே இருக்க மாட்டார்கள். இப்போது நேரு இறந்தார், அவருடைய சாம்பலை பல இடங்களில் சென்று போட்டார்கள். நல்ல உரம் கிடைத்தது என்று எண்ணுகின்றார்கள். பெரிய, பெரிய சந்நியாசி, மகான் ஆத்மா இறக்கின்றார்கள், அவர்களின் சாம்பலைக் கூட அம்மாதிரியாக போடுவதில்லை. அனைவரையும் விட உத்தமமானவர்கள் சந்நியாசிகள், இப்போது எத்தனை பேர் இறப்பார்கள். எவ்வளவு உரம் என்பது கிடைக்கும். ஆதலால் புதிய உலகத்தில் நல்ல தரமான தானியங்கள் கிடைக்கும்.

சத்யுகத்தில் பசுமையான காய்கறிகள் கிடைக்கும். இந்த உலகம் புதியதாக ஆக சமயம் தேவைப்படுகின்றது. நீங்கள் சூட்சுமவதனத்தில் செல்கின்றீர்கள் மிகவும் பெரிய, பெரிய பழங்களைக் காண்கின்றீர்கள். பழரசம் பருகுகின்றீர்கள். நீங்கள்

சிந்தனை செய்து பாருங்கள்! எவ்வளவு உரம் கிடைக்கின்றது! அவற்றிலும் குறிப்பாக பாரதத்திற்கு. அங்கு நல்ல, நல்ல பொருட்கள் புதிய உலகத்தில் உருவாகும். முழு உலகத்தின் உரத்தினால் புதுமையாக ஆகி விடும். சூட்சுமவதனத்தில் வைகுண்டத்தின் சூபிரசம் உங்களுக்குக் கிடைக்கும். தோட்டங்கள் சாட்சாத்காரம் (திவ்ய காட்சி) ஆகின்றது. குழந்தைகள் சாட்சாத் காரம் பார்த்தார்கள். சூபிரஸ் அருந்திவிட்டு வந்தார்கள், இப்போது சூட்சும வதனத்தில் தோட்டம் என்பதே இல்லை. அவசியம் வைகுண்டத்திற்கு சென்றிருப்பார்கள். அனைவரும் சாட்சாத்காரம் பார்க்கவில்லை. யார் நிமித்தமாக ஆகின்றார்களோ, அவர்களுக்கு சாட்சாத்காரம் காட்டினார். நீங்கள் நினைவில் இருந்தால், பாபாவின் குழந்தையாக இருந்தால் இறுதியில் சாட்சாத்காரம் ஆகலாம். முதலில் கௌசாலை உண்டாக்க வேண்டியதாக இருந்தது. பட்டியில் பக்குவப்படுத்தினார், நிறைய பேர் வந்தார்கள்.

குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார் மேலும் புத்தகத்தினை மற்றவர்களுக்கு கொடுப் பதால் புரிந்து கொள்ளமாட்டார்கள். அவசியம் டீச்சர் புரிய வைக்க வேண்டும். டீச்சர் வினாடியில் புரிய வைப்பார்கள். இவர் உங்களுடைய தந்தை, இவர் (பிரம்மா) சகோதரர். இவர் எல்லையற்ற தந்தை சொர்க்கத்தினைப் படைக்கின்றார். யாருக்காவது புத்தகம் கொடுத்தால் பார்த்துவிட்டு தூக்கிப்போட்டு விடுவார்கள். எதனையும் புரிந்து கொள்ள மாட்டார்கள். பாபா வந்து விட்டார் என்பதனைப் புரிய வையுங்கள். இம்மாதிரியான முரசு அடிக்க வேண்டியது உங்களின் கடமை. யாதவர்கள், கௌரவர்கள் உள்ளார்கள், மகாபாரத யுத்தமும் எதிரிலேயே உள்ளது. அவசியம் இராஜயோகம் கற்றுத்தரக் கூடியவர்களும் இருப்பார்கள். அவசியம் சொர்க்க ஸ்தாபனையும் உண்டாகும். ஒரு தர்மத்தின் ஸ்தாபனை, அநேக தர்மத்தின் அழிவும் உண்டாகும். நீங்கள் அறிந்து கொண்டீர்கள் ஆண்கள் நாராயணராகவும், பெண்கள் இலட்சுமியாகவும் ஆகின்றார்கள். இது தான் நம்முடைய குறிக்கோள். மனிதர்களை தேவதையாக ஆக்கினார் என்று பாடியுள்ளார் கள். சூரிய வம்சத்தில் உள்ளவர்களை மட்டும் தேவதைகள் என்று கூறப்படுகின்றது. சந்திர வம்சத்தினரைச் சத்திரியர்கள் என்று கூறப்படுகின்றது. முதலில் தேவதையாக ஆக வேண்டும். தோல்வி அடைபவர்கள் சத்திரியர்கள். பாபா கூறுகின்றார், இனிமையிலும், இனிமையான காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளே! எத்தனை பேர் செல்லமான குழந்தைகள். யாருடைய குழந்தையாவது 6-8 மாதம் காணாமல் போன பின்னர் கிடைத்து விட்டால் எவ்வளவு அன்புடன் வந்து சந்திப்பார்கள்! பாபாவிற்கு எவ்வளவு குஷி இருக்கும்! இந்த பாபா கூறுகின்றார், செல்லமான குழந்தைகளே! நீங்கள் ஐயாயிரம் ஆண்டிற்குப் பின்னர் வந்து சந்திக்கின்றீர்கள். செல்லமான குழந்தைகளே! நீங்கள் பிரிந்து போய் விட்டீர்கள். இப்போது மீண்டும் கிடைத்து விட்டீர்கள். எல்லையற்ற ஆஸ்தியை அடைவதற் காக. தெய்வீக உலகத்தின் சொர்க்க இராஜ்யம் என்பது உங்களுடைய இறை தந்தையின் பிறப்புரிமை. உங்களுக்கு பாபா எல்லையற்ற இராஜ்யத்தினைக் கொடுக்க வந்துள்ளார். இவர் சொர்க்கத் தினைப் படைக்கும் தந்தை. குழந்தைகளுக்காக மிகவும் பெரிய பரிசினை கொண்டு வந்துள்ளார். அந்தளவு தகுதியானவர்களாக ஆக வேண்டும். ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். அம்மா, அப்பா என்று கூறிவிட்டு மறந்து விட்டால், விவாகரத்து செய்து விட்டால் கழுத்து மாலையாக ஆக முடியாது. குழந்தைகள் மீது எவ்வளவு அன்பு செலுத்து கின்றார். அப்பா குழந்தைகளைத் தலைமீது

தூக்கி வைத்து கொள்கின்றார். எல்லையற்ற தந்தைக்கு எத்தனை குழந்தைகள்! பாபா எவ்வளவு தலைமீது தூக்கி வைக்கின்றார்! பாதங்களில் விழுந்தவர்களைத் தலை மீது தூக்கி வைக்கின்றார். எவ்வளவு குஷியாக இருக்க வேண்டும்! ஒருவருடைய ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். தனது மனவழியில் நடந்தால் இறந்து விடுவார்கள். ஸ்ரீமத்படி நடந்தால் சிரேஷ்டத்திலும், சிரேஷ்டமான மனிதர்கள் என்றால் தேவதையாக ஆவார்கள். பாபா கேட்கின்றார் எந்த எண்ணில் தேர்ச்சி அடைவீர்கள்? பாபா கூறுகின்றார் சூரிய வம்சத்தைச் சேர்ந்தவர்களாக ஆகுங்கள். தாய், தந்தையரைப் பின்பற்ற வேண்டும். தனக்கு சமமாக சுயதர்சன சக்கரதாரியாக ஆக வேண்டும். சிவபாபாவிற்கு முன்னால் அழைத்துச் செல்கின்றார்கள். அப்போது பாபா கேட்கின்றார் எத்தனை பேரை தன்னைப் போல் ஆக்கினீர்கள்? எவ்வளவு குஷியான விஷயங்கள்! நீங்கள் தான் புரிந்து கொள்ள முடியும், புதியதாக உள்ளவர்கள் புரிந்து கொள்ள முடியாது. இது மனிதர்களை தேவதையாக மாற்றக்கூடிய கல்லூரி. சிலர் ஏழு நாட்களில் நன்றாக ஞானத்தினைப் புரிந்து கொள்கின்றார்கள், ஞானம் என்ற கலர் உண்டாகி விடுகின்றது. சிலருக்கு சிறிது கூட கலர் ஏறுவதில்லை. நிறைய முயற்சி செய்ய வேண்டிய தாக உள்ளது. முதலாவது விஷயம் நீங்கள் புரிய வையுங்கள் எல்லையற்ற தந்தையை அறிந்து இருக்கிறீர் களா உடனே கூறுவார்கள். அவர் எனக்குள்ளும் இருக்கின்றார், சர்வவியாபி. பின்னர் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. பாபா கூறுகின்றார், எவ்வாறு தந்தை தங்களுக்குள், எனக்குள் இருப்பார்? பாபாவிடமிருந்து ஆஸ்தியினைப் பெற வேண்டும். முதலாவது இறைவனைப் பற்றி புரிய வையுங்கள்.

பாபா கூறுகின்றார், என்னுடைய செல்லமான குழந்தைகளே! இவ்வாறு எந்த சாது, சந்நியாசிகளும் கூற முடியாது. நீங்கள் தெரிந்து கொண்டீர்கள் நாம் சிவபாபாவின் செல்ல மான குழந்தை ஐயாயிரம் ஆண்டிற்கு பின்னர் வந்து சந்திக்கின்றோம், சொர்க்கத்தின் ஆஸ்தியை அடைவதற்கு. நாம் சொர்க்கத்தின் எஜமானராக இருந்தோம், நாம் தான் ஆகின்றோம், அவசியம் சொர்க்கத்திற்கு செல்ல வேண்டும். பின்னர் முயற்சிக்கேற்ப உயர்ந்த பதவி கிடைக்கும் நல்லது.

இனிமையிலும், இனிமையான வெகுகாலம் கழித்து காணாமல் போய் கண்டெடுக்கப் பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாய், தந்தையான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கங்களும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கியமான சாரம்:

(1) தாய், தந்தையைப் பின்பற்றி தனக்கு சமமாக மற்றவர்களையும் ஆக்க வேண்டும். சுயதர்சன சக்கரதாரியாக வேண்டும், மேலும் ஆக்க வேண்டும்.

(2) பாபாவின் கழுத்து மாலையாக ஆவதற்காக புத்தியின் மூலமாக பாபாவை நினைவு செய்ய வேண்டும். சப்தங்கள் செய்ய வேண்டியதில்லை. நினைவு செய்ய வேண்டும் என்ற ஈடுபாடு இருக்க வேண்டும்.

வரதானம் : தேக அபிமானத்தை தியாகம் செய்வதன் மூலம் சுய மரியாதையில் நிலைத்திருக்கக்கூடிய மரியாதைக்குரியவர் ஆகுக.

எந்த குழந்தைகள் இந்த ஒரு ஜென்மத்தில் தேக அபிமானத்தை தியாகம் செய்து சுய மரியாதையில் நிலைத்திருக்கிறார்களோ,

அவர்களின் இந்த் தியாகத்திற்கு பிரதிபலனாக பாக்கியத்தை உருவாக்கக்கூடிய தந்தையின் மூலம் முழு கல்பத்திற்கும் மரியாதைக்குரியவர் ஆக்குவதற்கான பாக்கியத்தை அடைந்து விடுகிறீர்கள். அரைக்கல்பம் பிரஜைகள் மூலம் மரியாதையை பெறுகிறீர்கள், அரைக்கல்பம் பக்தர்களின் மரியாதையை பெறுகிறீர்கள், மேலும் இந்த நேரத்தில் சங்கமயுகத்தில் சுயம் பகவானே தன்னுடைய சுயமரியாதை நிறைந்த குழந்தைகளுக்கு மரியாதை தருகிறார். சுயமரியாதை மற்றும் மரியாதை இரண்டும் தங்களுக் குள் மிகவும் அழமான தொடர்புடையதாக இருக்கிறது.

சுலோகன்: ஒவ்வொரு அடியிலும் பாபாவின், பிராமண குடும்பத்தின் ஆசீர்வாதங்களின் மரியாதைகளை பெற்றுக் கொண்டே இருந்தீர்கள் என்றால் சதா முன்னேறிக் கொண்டே இருப்பீர்கள்.